Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 1 25-1-1985 வெள்ளிக்கிழமை (ரக்தாக்ஷி தை 12) முழக்கம் 184

...சன நூலகம்
யாழ்ப்பாணம்.

## பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் நேற்று உயர்கல்வி அமைச்சின் பல்கலைக்கழக திருத்தச்சட்ட மசோதா விவாதத்துக்கு எடுக்கப்பட்டபோது, அதனை ஆட்சேபித்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களான எதிர்க்கட்சியினர் கூட்டாக வெளிநடப்புச் செய்தனர் புதிய மசோதாவை முழுமையாகத் தாம் வாசிக்கவில்லையென்றும், அதனால் விவாதத்தை வேறொரு திகதிக்கு ஒத்திவைக்குமாறும் இவர்கள் ஆரம்பத்தில் வேண்டுகோள் விடுத்தனர். இது ஏற்றுக்கொள்ளப்படாமல் மசோதா மீதான விவாதம் ஆரம்பமானதையடுத்து எதிர்க்கட்சியினர் வெளிநடப்புச் செய்தனர்.

# இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் இலங்கை அரசு அக்கறை காட்டவில்லை: பாரத அமைச்சர் கவலை

(புதுடில்லி)

இலங்கை அரசாங்கம் அதன் பாதுகாப்பு நடவடிக்கைகளில் கூடிய கவனம் செலுத்தி வருகின்றது. ஆனால் இனப்பிரச்சினைக்கு ஒருசுமுகமான அரசியல் தீர்வு காண்பதில் அக்கறையின்றி இருக்கிறது. இதனையிட்டு பாரதம் வேதனையடைகின்றது என்று வெளியுறவு இணையமைச்சர் குர்ஷித் அலம்கான் நேற்று தெரிவித்தார்.

இலங்கைப் பிரச்சினை பற்றிய கவன ஈர்ப்புப் பிரேரணையொன்று நேற்று ராஜ்ய சபாவில் கொண்டு வரப்பட்டது. பாரதிய ஜனதாக் கட்சி உறுப்பினர் திரு ஜத்வந்சிங் உட்பட பல்வேறு கட்சிப்பிரதிநிதிகளும் இலங்கைப் பிரச்சினை பற்றிப் பல கேள்விகளை எழுப்பினர். இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தாக்கப்பட்டமைக்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டதென்றும் சிலர் கேட்டனர்.

அமைச்சர் அலம்கான் விவாதத்துக்குப் பதிலளித்துப் பேசுகையில் சர்வகட்சி மாநாடு முடிவெதுவுமின்றி நிறைவு பெற்றதும், தமிழர்நிலை இலங்கையில் மோசமாகி வருவதும் மேலும் பலதமிழர்களை இந்தியாவுக்கு அகதிகளாக வரச்செய்யுமென்றும் சொன்னார்.

இலங்கையில் இதே நிலைதொடருமானால் ஏற்கனவே இந்தியா வந்துள்ள அகதிகள் திரும்பிச் செல்ல முடியாதநிலை ஏற்படுமெனவும் தெரியவந்துள்ளது

# 17 தமிழக மீனவரும் விடுதலை! வழக்கை அரசு வாபஸ் பெற்றது

## இலங்கைக் கடற்படை வீரர் விடுதலையானது பற்றி உத்தியோகபூர்வ அறிவுப்பு வரவில்லை

(கொழும்பு)

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுக் கடந்த அக்டோபர் மாதம் முதல் தடுத்துவைக்கப்பட்டிருந்த பதினேழு தமிழக மீனவர்களுக்கும் எதிரான வழக்கை அட்டர்ணி ஜெனரல் நேற்று வாபஸ் பெற்றதைத் தொடர்ந்து அவர்கள் அனைவரும் நேற்று விடுதலை செய்யப்பட்டனர். இவர்களைப் பாதுகாப்பாக மன்னாருக்கு அழைத்துச் சென்று, அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் இவர்களின் பதினேழு படகுகளையும் சேர்த்து கடற்படையினரின் பாதுகாப்புடன் தமிழ் நாட்டுக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதே வேளையில், இம்மாதம் பதினொராம் திகதி இந்திய கடல் எல்லைக்குள் வைத்துக் கைது செய்யப்பட்ட ஏழு கடற்படை வீரர்களையும் இந்திய அரசு விடுதலை செய்திருப்பதாக வெளிவிவகார அமைச்சர் ஜனாப் ஏ சி எஸ் ஹமித் நேற்று மாலை பாராளுமன்றத்தில அறிவித்தார்.

எனினும் இச்செய்தி அச்சுக்குப்போகும்வரை, கடற்படையினர் எழுவரும் விடுதலை செய்யபபட்டதற்கான உத்தியோசபூர்வ அறிவிபபெதுவும் இந்திய அரசினால் வெளியிடப்படவில்லை. அனேகமாக இவர்கள் இன்று விடுவிக்கப்படலாமென்று பிந்திக் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை அரசால் விடுவிக்கப்பட்ட தமிழக மீனவர்களும் இன்று தலைமன்னார் கொண்டுவரப்பட்டு அங்கிருந்து அனுப்பப்படுவர் என்று தெரியவந்துள்ளது, இதற்க

—4-ம் பக்கம் பார்க்க

## மேலும் உதவிகளைப் பெறுவதற்கு லலித் நேற்று அமெரிக்கா பயணம்

இலங்கையில் இடம்பெறும் பயங்கரவாத அதிகரிப்புச் செயல்கள் பற்றி அமெரிக்க அரசு அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலி நேற்று அமெரிக்கா பயணமானார்,

அங்கிருந்து அவர் மேலும் இரு முக்கியமான இடங்களுக்குச் செல்லலாம் என்று பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கையின் பந்தோபஸ்

—4ஆம் பக்கம் பார்க்க

## விக்கிரம பிரிட்டன் பயணம்

திட்ட அமுலாக்கல் அமைச்சின் செயலாளர் கலாநிதி விக்கிரம வீரசூரியா இன்று பிரிட்டன் பயணமாகவிருக்கிறார்.

—4-ஆம் பக்கம் பார்க்க

## விஜி - காளி; யாழ்தேவியைத் தாக்கியவர்களாம்!

## பியதாஸ சுட்டுக் கொலை

சுண்டுக்குளி பழைய பூங்கா வீதியிலுள்ள வீடொன்றில் பணிபுரிந்து வந்த பியதாச (23) என்ற இளைஞன் நேற்று மாலை இனம் தெரியாதவர்களால் சுடடுக்கொலை செய்யப்பட்டார்.

# ராணுவ சூட்டுக்கு பலியான 2 இளைஞர் சடலம் ஆஸ்பத்திரியிலிருந்து இளைஞரால் கடத்தல்

யாழ்ப்பாணம் கண்டி வீதியிலுள்ள செம்மணிச் சந்தியில் நேற்றுக்காலை இராணுவத்தினரால் சுட்டுக் கொலலப்பட்ட இரண்டு இளைஞர்களினதும் சடலம், நேற்று மாலை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிச் சவச்சாலையிலிருந்து இளைஞர் கோஷ்டியொன்றினால் கடத்திச் செல்லப்பட்டது.

நேற்றுக்காலை சம்பந்தப்பட்ட இரண்டு இளைஞர்களும் மோட்டார் சைக்கிளொன்றில் செம்மணிச் சந்தியடியில் சென்ற போது அங்கு நின்ற இராணுவத்தினரால் சுட்டுக் கொலலப்பட்டதாக முன்னர் அறிவிக்கப்பட்டது.

இவர்களின் சடலங்களைஇராணுவத்தினரே நேற்றுப் பிற்பகல் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தனர். ஊரடங்குச் சட்ட நேரம் ஆரம்பமாவதற்குச் சிலநிமிடங்களுக்கு முன்னர் வெள்ளை நிறவனொன்றில் ஆஸ்பத்திரிக்கு வந்த இளைஞர் கோஷ்டியொன்று இரண்டு சடலங்களையும் கடததிச்சென்றது.

மரணமானவர்கள் ''ரெலோ'' இயக்கத்தைச் சேர்ந்தவர்க

—4-ம் பக்கம் பார்க்க

## பீலிக்ஸ் லண்டன் பயணம்

முன்னாள் நிதி, நீதி அமைச்சரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்களில் ஒருவருமான திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா கடுமையான சுகவீனம் காரண

—4ஆம்பக்கம் பார்க்க

## வழக்குகள் ஒத்திவைப்புக்கு பதின்மூன்று காரணங்கள்

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள நீதிமன்றங்களிலுள்ள வழக்குகளின் விசாரணைகளைத் திகதி குறிப்பிடப்படாது ஒத்திவைக்கவேண்டுமென்ற தங்களின் கோரிக்கைக்கு, பதின்மூன்று காரணங்களைச் சுட்டிக்காட்டி யாழ்ப்பாண சட்டத்தரணிகள் சங்கம் மகஜரொன்றைச் சமர்ப்பித்துள்ளது.

பொதுமக்களை பாதுகாப்புப் படையினர் சுட்டுக்கொல்வது போதுமான போக்குவரத்து வசதி இல்லாமை; ஜனசரி நடைபெறும் கொள்ளைகள், களவுகள் பற்றி பொலிஸில் முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளமறுப்பது, சந்தேக நபர்களை றிமாண்டில் வைக்க இடமில்

—4-ம் பக்கம் பார்க்க

## கட்சிவிட்டுக் கட்சிமாற இந்தியாவிலும் தடை

(புதுடில்லி)

நாடாளுமன்றம், சட்டப்பேரவை உறுப்பினர்கள்கட்சிவிட்டு கட்சி தாவுவதைத் தடை செய்யும் மசோதா நேற்று லோக்சபாவில் தாக்கல் செய்யப்பட்டது. மத்திய சட்ட அமைச்சர் அசோக்சென் சமர்பித்த இந்த மசோதாவின்படி தேர்தலில் ஒருகுறிப்பிட்ட கட்சியின் அங்கத்தவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் பின் கட்சிமாறினால் அவர் பதவி நீக்கம் செய்யப்படுவார்.

இம் மசோதாவினது கருத்துக்களின்படி ஒரு கட்சியின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பி

—4-ம் பக்கம் பார்க்க

## சிறில் மத்தியுவின் 2ம் சட்ட நடவடிக்கை; இன்றைய கூட்டத்துக்கும் இடைக்கால தடை!

(கொழும்பு)

அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட களனி தொகுதி எம்.பி. சிறில் மத்தியு ஐக்கிய தேசியக் கட்சியின் ஜாதிக சேவா சங்கமயவின் இன்றைய கூட்டத்தை நடத்துவதைத் தடை செய்ய இடைக்கால உத்தரவு பிறப்பிக்குமாறு நேற்று தாக்கல் செய்த மனு கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

தாம் தலைவராக இருக்கும் இச்சங்கத்தின் கூட்டத்தை உபதலைவர்கள் நடத்த முனைவதாக தெரிவித்து, அதற்கு

—4-ம் பக்கம் பார்க்க

## குண்டுச் சத்தம்

தொண்டமானாறு வளலாய் பகுதியில் நேற்று மாலை திடீரெனக் கேட்ட குண்டுவெடிப்புச் சத்தங்களால் இப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவி

—4-ஆம் பக்கம் பார்க்க

## காங்கேசன் தபாலக கொள்ளை

(காங்கேசன்துறை)

காங்கேசன்துறை தபால் நிலையத்தில் நேற்று நடைபெற்ற கொள்ளைச் சம்பவ

—4-ம் பக்கம் பார்க்க

# யாழ்தேவிகண்ணிவெடிவிபத்தில் அகப்பட்டு உயிர்தப்பிய பௌத்த பிக்குவின் தகவல்

முறிகண்டியில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற யாழ்தேவி கண்ணிவெடி விபத்தில் சிக்கி காயத்துடன் தப்பியவர்களில் ஒருவர் பௌத்த பிக்குவான வண. சுகதஞான தேரோ ஆவர்.

இவர் கிளிநொச்சி சிங்கள மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணியாற்றியவர். இங்கிருந்து இடமாற்றம் பெற்று அனுராதபுரம் பாடசாலையொன்றில் கடமையை ஏற்கச் செல்லும் போதே இவர் விபத்தில் சிக்கநேர்ந்தது.

தற்போது அனுராதபுரம் பிக்குமார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் சுகதஞான தேரோ நடைபெற்ற சம்பவத்தை பின்வருமாறு விளக்கினார்:

கிளிநொச்சி ரயில் நிலையத்தில் ரயில் வருவதற்குச் சில நிமிடங்கள் முன்பு பல வெடிச் சத்தங்களைக் கேட்டேன். மக்கள் பதற்ற மடைந்து ஓடத் தொடங்கினார்கள் பலர் புகையிரத நிலைய அதிபரிடம் சென்று அன்றைய தமது டிக்கட்டை ரத்து செய்து அடுத்த நாளுக்கு பதிவு செய்து டிக்கட் பெற்றுச் சென்றனர். அவர்கள் எல்லோரும் தமிழில் பேசினர்.

வண்டி வந்ததும் நான் ஏறி இரண்டாம் வகுப்பு உறங்கலிருக்கையொன்றில் அமர்ந்தேன் முறிகண்டி ஸ்டேசனைக் கடந்ததும் இருக்கையிலிருந்து தூக்கி வீசப்பட்டேன். பல ஆசன இருக்கைகள் என் மீது விழுந்தன. துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களையும் கேட்டேன்.

இந்த வன்முறைகளை என்னால் விளங்கிக் கொள் முடியவில்லை நான் கற்பித்த கிளிநொச்சி சிங்கள வித்தியாலயத்தில் 10, 15 சிங்கள மாணவர்களே இருந்தார்கள் தமிழ் மாணவர்கள் சுமார் 200 பேர். அவர்களனைவரும் சிங்களத்தையே போதனா மொழியாகக் கொண்டு அம்மொழியிலேயே பாடங்களைப் படித்தார்கள். அப்பகுதி மக்கள் நல்ல ஒத்துழைப்பை வழங்கினர் எனக்கு எந்தப் பிரச்சனையும் இருக்கவில்லை.

## வரி விளம்பரம்

### ஸ்ரீ சக்கரம்

சகலவித தோஷங்களுக்கும், சௌபாக்கியங்களுக்கும் சாஸ்திர முறையில் செய்த ஸ்ரீ சக்கரம் பெறறுக்கொள்ளலாம்.

ஏல விற்பனை நிலையம்
கோப்பாய்.

### விற்பனைக்கு

பருத்தித்துறை. தும்பளையில் சிவப்பிரகாச வித்தியாசாலைக்கு அருகாமையில் 1¼ பரப்பு காணி இரண்டறை வீட்டுடன் விற்பனைக்கு உண்டு விளம். இல: 1505 ஈழமுரசு 57, கண்டி வீதி யாழ்ப்பாணம்

### தேவை

எம்மிடமுள்ள பலவித பொருட்களையும் வீடுகளிலும் கடைகளிலும், காரியாலயங்களிலும் மொத்தமாகவும் சில்லறையாகவும்விற்பதற்கு ஆண்களும் பெண்களும் நற்சாட்சிப் பத்திரங்களுடனும், கிராம சேவையாளரின் பத்திரத்துடனும் நேரில் வரவும்.

ஏல விற்பனை நிலையம்,
கோப்பாய்

### வாடகைக்கு

கச்சேரிக்கு அருகாமையில் கண்டி வீதியில் புதிய வீடு வாடகைக்கு உண்டு தொடர்பு டாக்டர் சுந்தரலிங்கம், 38 கண்டி வீதி, யாழ்ப்பாணம்

# கலப்பட வியாபாரிகளுக்கு தலா 250 ரூபா அபராதம்

யாழ் நகரிலுள்ள சில வர்த்தக நிலையங்களில் தரம் குறைந்த உளுந்து, மிளகு, உள்ளி செத்தல மிளகாய் மற்றும் நல்லிரசம், நல்லெண்ணெய் முதலிய பதார்த்தங்கள் விற்கக் கண்டுபிடிக்கப்பட்டன.

யாழ் மாநகர உணவுப் பரிசோதகர் திரு. கே. குமரகுரு தலைமையில் மாநகர சுகாதார மேற் பார்வையாளர்கள் திரு. ஏ. ஜே. அந்தோனிப்பிள்ளை, திரு. சி. சிவராஜேஸ்வரன் ஆகியோரின் திடீர் சோதனையின் போதே இம்மோசடி கண்டுபிடிக்கப்பட்டது.

இவ்வர்த்தகர்கள்மீது யாழ். நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு இருந்தது. கொழும்பு இரசாயனப் பகுப்பாய்வாளர் அறிக்கையைத் தொடர்ந்து யாழ் நீதிவான் திரு. எஸ். நாகராசா இவர்களுக்கு தலா இருநூற்றுஐம்பது ரூபா அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கினார்.

## வருடாந்த உற்சவம்

குருநகர் புதுமைமாதா ஆலய வருடாந்த உற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் இரண்டாம் திகதி காலை திருநாள் பூசையுடன் முடிவடையும். வண. பிதா மேரி பஸ்ரியன் மலரவனும், வடபகுதியின் திருப்பாடுகளின் நிலையமும் திருநாட்களை மிக அமைதியாகவும், எளிமையாகவும் கொண்டாடப் படவிருப்பதாக குருநகர் பங்குத்தந்தை வண. பிதா பீற்றர் துரைரட்ணம் தெரிவித்துள்ளார்.

## 26ம் திகதி பொதுக்கூட்டம்

பருத்தித்துறை பிரஜைகள் குழுவின் பொதுக் கூட்டமும் நிர்வாகிகள் தெரிவும் 26ம் திகதி சனிக்கிழமை காலை ஒன்பது மணிக்கு பருத்தித்துறை சிவன் கோவில் பார்வதி பத்தினி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இப்பகுதி மக்களை இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமபடி இக்குழுவின் தலைவர் பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.




✳ வயாவிளானைச் சேர்ந்த யசோதரன் சகுந்தலாதேவி தம்பதிகளின் புதல்வன் சஞ்சீவ் இன்று தனது முதலாவது பிறந்த தினத்தைக் கொண்டாடுகிறார்.

✳ கொழும்புத்துறை ஆனந்த நாயகம் தேவி தம்பதிகளின் மகள் ஜொய்லின் சுபாஜினி தனது பத்தாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✳ நவாலி தெற்கு கந்தவனம் தவமணி தம்பதிகளின் மகன் சுதனன் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✳ பொக்குவில் மேற்கு தவராசலிங்கம் ராஜினி தம்பதிகளின் மகன் அரவிந்தன் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✳ கல்வியங்காடு சிறிஸ்கந்தராசா சாந்தன்தேவி தம்பதிகளின் மகள் ரஜிதா இன்று தனது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✳ ஆனைக்கோட்டை சாந்தலிங்கம் மகேஸ்வரி தம்பதிகளின் மகள் பிரேமினி இன்று தனது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✳ யாழ். கமால் லேன் முகமது துபுருதீன் மஹ்ருக்கா தம்பதிகளின் மகன் முகமது ஹிபாஸ் இன்று தனது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✳ நாவற்குழி சுப்பிரமணியம் தர்மவதி தம்பதிகளின் மகன் கிருஷ்ணராஜ் இன்று தனது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✳ யாழ். பிரப்பங்குளம் வீதி சோமசுந்தரம் நளினி தம்பதிகளின் மகன் ரஞ்சித்குமார் இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✳ பாஷையூர் சென் அன்ரனிஸ் வீதி சனுவா ஜெசுராணி தம்பதிகளின் மகள் டிசாந்தினி இன்று தனது மூன்றாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✳ திருமலை செல்வநாயகபுரம் சண்முகநாதன் தம்பதிகளின் மகள் சாந்தவதனி இன்று தனது பன்னிரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✳ மாவிட்டபுரம் முத்துலிங்கம் பகவதி தம்பதிகளின் மகன் கந்தசாமி இன்று தனது ஐந்தாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

## யாழ். பதிவாளர் அலுவலகம்

# ஒரு மாதத்தில் 15,000 சான்றிதழ்கள் வழங்கியது!

ஒரு மாதத்தில் சுமார் பதினையாயிரம் இறப்பு, பிறப்பு, விவாகச் சான்றிதழ்களை கையால் எழுதி விநியோகித்ததன் மூலம் யாழ்ப்பாணம் கச்சேரி பதிவாளர் அலுவலகம் ஒரு சாதனையை நிலைநாட்டியுள்ளது.

இங்கிருந்த இரண்டு போட்டோ பிரதி இயந்திரங்கள் மூன்று மாதத்திற்கு முன்னர் கொள்ளையடித்துச் செல்லப்பட்ட பின்னர் சான்றிதழ்கள் ஊழியர்களால் எழுதியே வழங்கப்பட்டு வருகின்றன. இதனால் பல நூற்றுக்கணக்கான விண்ணப்பங்கள் பல வாரங்களாகத் தேங்கிக் கிடந்தன.

சனி, ஞாயிற்றுக்கிழமைகளிலும், விடுமுறை தினங்களிலும் மேலதிக ஊழியர்கள் வேலையில் ஈடுபடுத்தப்பட்டதால் தேங்கிக் கிடந்த பதினையாயிரம் விண்ணப்பங்களையும் எழுதி முடிக்கக்கூடியதாக இருந்ததாக மாவட்ட உதவிப் பதிவாளர் திரு. எல். இராசையா தெரிவித்தார்.

டிசெம்பர் 31 வரை விண்ணப்பித்த அனைவரது இறப்பு, பிறப்பு, விவாகப் பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டு விட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## உங்களுடையதா?

ஆனைப்பந்தி, தனியார் வைத்தியசாலை முன்பதாக "யூனியன்" வர்க்க திறப்பு ஒன்று கே. இரத்தினசிங்கம் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு ஈழமுரசு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் ஆதாரங்காட்டிப் பெற்று கொள்ளவும்.

# நன்றி நவில்கிறோம்



வல்லிபுரம் செல்லையா

எம்மையெல்லாம் ஆறாத்துயருக்கு ஆளாக்கி மீளாத்துயில் கொண்டு இறைவன் திருத்தாளில் சங்கமித்த எமது குடும்பத் தலைவர். உயர்திரு. வல்லிபுரம் செல்லையா அவர்களின் மறைவு கேட்டு மரணச் சடங்கில் கலந்து கொண்டோர். அனுதாபச் செய்திகள் அனுப்பியோர், எம்முடன் கலந்து பல வழிகளிலும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும், இன்று நடைபெறும் ஆத்மசாந்தி வைபவத்தில் பங்கு கொண்டு சிறப்பித்த அனைவருக்கும் எங்கள் இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

புன்னாலைக்கட்டுவன் 25-1-85 — மனைவி, மக்கள், மருமக்கள் பேரப்பிள்ளைகள்.

# நினைவஞ்சலி

## அமரர் ஆர். அரசரத்தினம்

அண்மையில் காலமான அமரர் ஆர். அரசரத்தினம் (உரிமையாளர் அரஸ்கோ), அவர்களது பேரிழப்பில் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமபனைவரினதும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சென்னையில் நடைபெற்ற இறுதிக் கிரியைகளையொட்டி அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் அன்னாரின் இல்லத்தில் அமைந்திருக்கும் ஆலயத்திலிருந்து அருள்பாலிக்கும் முருகப்பெருமான் திருவடி நீழலில் குடி கொண்டிருக்கவும மனமுருகிப் பிரார்த்திக்கின்றோம்.

3, வைமன் வீதி யாழ்ப்பாணம் — கா. சூரத்தினசிங்கம் குடும்பத்தினர் (முன்னை நாள் கணக்காளர்-அரஸ்கோ)

மாதாந்தம் 36% வட்டி விழாக்கால சலுகை!

15-12-84 முதல்
30-01-85 வரை

36% அதிக வட்டி வழங்கும் நிதி நிறுவனம்
தமிழர் நிதியம்
140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். ☎ 22437

உறுதியான பாதுகாப்பிற்கும், மேலதிக லாபத்திற்கும் எம்மிடம் வைப்பிலிடுங்கள்.

உதய சிந்தனை

மனிதன் செய்யும் சட்டம் எப்போது இயற்கையின் நியதிக்கு விரோதமாகிறதோ, அப்போதே அது செத்துப்போன சட்டமாகிவிடும்.

—மகாத்மா காந்தி

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23336

## இதய ஒலி

25-1-85 வெள்ளிக்கிழமை (இரத்தாக்ஷி தை 12)

# திருப்தி மட்டும் போதாது; தீர்வும் காண வேண்டும்!

இலங்கை-இந்திய உறவில் ஏற்பட்டு வந்த விரிசலுக்கு 'ஒட்டுப்' போடும் முயற்சியில் சிலர் இறங்கியிருப்பது போலத் தெரிகிறது.

நம் நாட்டு ஆட்சியாளர்கள் சூடு பறக்கச் சவால்கள் விட்ட போதெல்லாம், பாரத அரச உயர் மட்ட அதிகாரிகள் காட்டி வந்த பொறுமையும், கோபப்படாத மௌனமும் கூட இதற்கொரு காரணம் என்று சொல்லலாம்,

"இலங்கை மீது படை எடுப்போம்! ஆட்சியாளரை மடக்கி விரட்டுவோம்" என்று பாரத அரசு எப்போதும் வீறுப்புப் பேசியது இடையாது. அதற்குப் பதிலாக "இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வுகாண முடியாது; அரசியல் தீர்வுதான் காண வேண்டும்" என்றே சொல்லி வந்தது.

இலங்கைக்கு இந்தியா ஆயுத உதவி வழங்க முன்வரவில்லை. இது உள்ளூரில் சிலருக்கு ஆத்திரத்தை ஊட்டியிருக்கலாம்.

"தமிழ்த் தீவிரவாதிகளுக்கு எதிராகப் போராட இந்தியா இலங்கைக்கு ஆயுதங்கள் வழங்கினால் அதனை ஏற்றுக் கொள்வேன்" என்று நியூஸ்வீக் சஞ்சிகைப் பேட்டியில் "மறைமுக அழைப்பொன்றை" ஜனாதிபதி கூட நாசூக்காக தெரிவித்திருந்தார்.

"ஈழத்தமிழர்களுக்கு பிரச்சனையுண்டு; தமிழர்கள் படுகொலை செய்யப்படுகின்றார்கள்" என்ற உண்மையை உலகம் நம்பும் வகையில் எடுத்துக் காட்டிய ஒரே நாடு இந்தியா தான்.

இதுவும்கூட உள்ளூரி சிலருக்கு இந்தியாமீது ஆத்திரத்தை ஊட்ட காரணமாயிருந்திருக்கலாம்.

இவைகளைக் கண்டு இந்தியா அச்சம் கொள்ளவில்லை; அலட்டிக் கொள்ளவுமில்லை.

"இலங்கை அகதிகள் முப்பதாயிரம் பேர் இந்தியாவில் அடைக்கலம் புகுந்துள்ளனர். இவர்கள் மீண்டும் இலங்கை செல்லக்கூடியதான தீர்வு ஏற்படும்வரை இந்தியா இலங்கைப் பிரச்சினையில் தலையிடுவது தவிர்க்க முடியாதது" என்ற தனது நிலையிலிருந்து இந்திய அரசு கடைசிவரை மாறுபடவில்லை.

இரண்டு தினங்களுக்கு முன்னர் இந்தியப் பாராளுமன்றத்தில் உரையாற்றியபோதுகூட பிரதமர் ராஜீவ் காந்தி இதனை வலியுறுத்தியுள்ளார். லோகசபாவிலும், ராஜ்யசபாவிலும் உரையாற்றிய அனைத்துக் கட்சியினரும இதனைச் சுட்டிக் காட்டியுள்ளனர்.

மொத்தத்தில், இந்தியாவின் அமைதியான, பயமுறுத்தலற்ற, நிதானமான போக்கு இலங்கை ஆட்சியாளர்களிடையே ஒரு மனமாற்றத்தை இப்போதாவது ஏற்படுத்தியமை மகிழ்ச்சியைத் தருகின்றது.

தமிழக மீனவரை விடுவிக்குமாறு பாரதம் கேட்டபோது தூக்கியெறிந்து அறிக்கை விட்டு சர்வதேசச்சட்டம் பேசியவர்களும், பாரதத்தால் கைது செய்யப்பட்ட கடற்படையினரை விடுவிக்க கடற்சட்டம பற்றி விளக்கம் கொடுத்தவர்களும் இப்போதாவது பாரதத்தின் உண்மையான நிலையை அறிந்து கொண்டார்களே என்று நினைக்கும்போது மகிழ்வடையாமல் இருக்க முடியுமா?

இலங்கை பற்றி இந்தியாவின் உயர் மட்டத்தில் நல்லெண்ணமும் நட்புறவும் இருப்பதையிட்டு இலங்கை அமைச்சரவை திருப்தி அடைந்திருப்பதாக ராஜாங்க அமைச்சர் திரு ஆனந்த திசை டி அல்விஸ் தெரிவித்துள்ளார்.

பாரதப்பிரதமர் ராஜீவ் காந்தியின் பாராளுமன்ற உரையைச் சுட்டிக்காட்டி, அவரின் பொறுப்பு வாய்ந்த பேச்சினால் இலங்கை அமைச்சர்கள் திருப்தியடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

"இனப்பிரச்சினை சம்பந்தமாக உயர்மட்டப் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளத்தாம் எதிர்பார்த்திருப்பதாக தெரிவித்த ராஜீவ் காந்தி, சர்வகட்சி மாநாடு எந்த முடிவையும் காணாது முடிவுற்றது ஏமாற்றத்தையும் வேதனையையும் தருவதாகவும்" குறிப்பிட்டதே அந்த முக்கிய பேச்சாகும்.

இந்தப் பேச்சே இலங்கை அமைச்சர்களின் மனமாற்றத்துக்கும், திருப்திக்கும் காரணம்.

இலங்கையை திருப்திப்படுத்துவதற்காக பாரதப் பிரதமர் இந்த உரையை நிகழ்த்தியிருக்க மாட்டார் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டுமென்பதே அவரது உரையின் அடித்தொனியாகும்.

எனவே, திருப்தியடைந்திருக்கும் அமைச்சர்கள், தீர்வைக் கண்டு மற்றவர்களைத் திருப்திப்படுத்தவும் முனைய வேண்டும்.

---

## பாகிஸ்தான் பொதுத் தேர்தல்

# ஜனாதிபதி நிலை வலுவா உறுதி எதிர்ப்பில் பூட்டோ மகளும்!

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் அடுத்தமாதம் திட்டமிட்டவாறு பொதுத் தேர்தல் நடைபெற்றே தீரும் என்று இராணுவ ஆட்சியின் ஜனாதிபதி ஜெனரல் ஷியாவுல்—ஹக் உறுதியாக அறிவித்து அந்நிலையிலிருந்து சற்றும் விட்டுக்கொடுக்காது செயற்படுகின்ற சமகால வேளையில் பாகிஸ்தானின் எதிர்க்கட்சிகள் பொதுத் தேர்தலைப் பகிஷ்கரிப்பதென்ற தம் நிலைப்பாட்டிலிருந்து விலகும் நிலையிலில்லை என்பதனை இஸ்லாமாபாத் அறிக்கைகள் எடுத்தியம்புகின்றன. எதிர்க்கட்சிகளின் பகிஷ்கரிப்பு நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்தும் வகையில் இராணுவ ஆட்சியால் தூக்கிலிடப்பட்ட மாஜி பாகிஸ்தான் ஜனாதிபதி சுல்பிகார் அலி பூட்டோவின் மகள் செல்வி. பெனாஸிர் பூட்டோ லண்டனில் இருந்து பாகிஸ்தான் நோக்கி வருகிறார் விரைந்து என்று நேற்று அறிவிக்கப்பட்டது.

எதிர்க்கட்சிகள் தொடர்ந்து பகிஷ்கரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதால் ஜனாதிபதி ஷியாவுல்—ஹக்கின் ஆட்சி பல சங்கடங்களை எதிர் நோக்க வேண்டியுள்ளதாம். ஜனாதிபதியின் பொதுத் தேர்தல் அறிவிப்பு இராணுவ ஆட்சியைத் தொடரச் செய்யும் சதித்திட்டம் என்று எதிர்க்கட்சிகள் தொடர்ந்து பிரசாரம் செய்து வருகின்றன. இதற்கிடையில் எதிர்க்கட்சித் தலைவர்கள் பலரும் தொடர்ந்து கைதாகித் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

---

## தமிழகத்திலும விரிவான ஏற்பாடு

(சென்னை)

பாரதக் குடியரசுதினம் எதிர் வரும் சனிக்கிழமை தமிழகத்திலும் மிக விரிவான வகையில் கொண்டாடப்படவிருக்கிறது. சென்னையில் மட்டுமன்றி பிற மாவட்டங்களிலும் இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சென்னையில் மரீனா கடற்கரையில் காந்திஜி சிலைபருகே விழா ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அணிவகுப்பு மரியாதைகளை ஆளுநர் திரு எஸ். எல். குரானா ஏற்றுக் கொள்வார்.

வழமைபோல் இத்தடவை குடியரசு தினவிழாவில் கலந்து கொண்டுசிறப்பிக்கும் வாய்ப்பு துரதிர்ஷ்ட வசமாக சுகவீன காரணத்தால் முதலமைச்சர் திரு எம். ஜி. இராமச்சந்திரனுக்கு கிடைக்காத சூழ்நிலையாகிற்று. அலங்கார ஊர்திகளும் இவ்விழாவில் இடம் பெறவுள்ளன.

---

## பாகிஸ்தானுடனான உறவில் நம்பிக்கை இழக்கவில்லை

### பிரதமர் ராஜீவ் சொல்கிறார்

(புதுடில்லி)

"பாகிஸ்தானுடன் நட்புறவு தொடரும்என்ற நம்பிக்கையை பாரதம் இன்னமும் இழந்துவிடவில்லை" என்று பிரதமர்



திரு. ராஜீவ்காந்தி லோகசபையில் பேசுகையில் கூறினார்.

'சமீபத்தில் பாகிஸ்தான் ஜனாதிபதி ஷியாவுல்—ஹக் என்னைச் சந்தித்த போது பயனுள்ள வகையில் பேசினார். ஆனால் பாகிஸ்தானின் சில நடவடிக்கைகள் உறவுக்கு ஏற்றதாக இல்லை. இந்த முரண்பட்டநிலை நீங்கினாலே உறவு உறுதிப்படும். நல்லுறவு தொடரும் என்ற நம்பிக்கை எமக்கு இன்னமும் உண்டு" என்றும் பிரதமர் சொன்னார்.

---

## தூய பொது வாழ்வு குறித்து ராஜீவ்

(புதுடில்லி)

"கட்சிமாறல் தடைச் சட்டம் தூய்மையான பொது வாழ்வுக்கு இன்றியமையாதது" என்று பிரதமர் திரு. ராஜீவ் காந்தி லோக சபையில் ஆற்றிய தனது முதலாவது பேருரையில் கூறினார்.

"தேர்தல் சீர்திருத்தச் சட்டம் அவசரமாக அல்லசாவதானமாகக் கொண்டு வரப்படும் புதிய தொழில் நுட்பக் கொள்கை அமுல் குறித்தும் அரசு ஆலோசிக்கிறது" என்றும் பிரதமர் கூறினார்.

---

## தமிழக நங்கை பெறும் பரிசு

(சென்னை)

சர்வதேச இளைஞர் ஆண்டையொட்டி புதுடில்லியில் நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளில் சிறந்த நடிகைக்கான பரிசினை "வந்தே மாதரம்" என்ற ஓரங்க நாடகத்தில் நடித்ததன் மூலம் தமிழ் நாட்டைச் சேர்ந்த சீதா என்ற பெண் பெற்றுள்ளார்.

---

## ரஷ்யாவிலும் சீரான ஏற்பாடு

(மாஸ்கோ)

பாரதக் குடியரசு தினவிழா சோவியத் யூனியனிலும் சிறப்புறக் கொண்டாடப் படவுள்ளதாக மாஸ்கோ அறிக்கைகள் தெரிவிக்கின்றன

பாரதத்தின் வீரம், தியாகத்தை எடுத்துக் காட்டும் ஏற்ற மிகு கண்காட்சி, திரைப்படங்கள், கருத்தரங்குகள் என்பன விரிவான வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன

---

## இன்று தெரிவு

(புதுடில்லி)

ராஜ்யசபையின் புதிய துணை தலைவர் தெரிவு இன்று நடைபெறவிருக்கிறது இப்பதவியிலிருந்த திரு. யாசவ் லோக சபைக்குத் தேர்தெடுக்கப்பட்டுவிட்டதால் இப்பதவி காலியாகியுள்ளது.

---

## எதிர்க்கட்சித் தலைவர் படுகொலை

# பிலிப்பைனஸின் முப்படை தலைவர்மீதும் குற்றச்சாட்டு

(மணிலா)

பிலிப்பைன்ஸ எதிர்க்கட்சித் தலைவர் அக்கினோ படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக பொலிசார் நடத்தி வந்த தீவிர புலன் விசாரணைகள் பூர்த்திபெற்றுள்ளன என்று மணிலா செய்திகள் நேற்றுத் தெரிவித்தன.

இக்கொலை தொடர்பாக அரசாங்க உயர்மட்ட அதிகாரிகள் பலரும் புலன் விசாரணையில் மாட்டிக் கொண்டுள்ளனர்.

பிலிப்பைன்ஸ் தேச முப்படைகளின் தலைவர் உட்பட சில உயர் இராணுவ அதிகாரிகள் மீதும் இக்கொலை வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

இப் படுகொலை சர்வதேச ரீதியில் பெருத்த சலசலப்பையும், அதிர்ச்சியையும் தோற்றுவித்தது குறிப்பிடத்தக்கது.

---

## எம். ஜி. ஆருக்கு அமெரிக்க தமிழர் கௌரவமளிப்பர்

(நியுயோர்க்)

பெப்ரவரி மாத முற்பகுதியில் நலம்பெற்ற நிலையில் தமிழகம் திரும்பவுள்ள தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனுக்கு அமெரிக்காவிலுள்ள தமிழ் அமைப்புகள் பலவும் சிறப்பான வரவேற்பு அளித்து கௌரவமளிக்கவுள்ளன.

இந்த வகையில் நாளை அவருக்கு தமிழ்ச்சங்க அமைப்புகளின் பிரதிநிதிகள் இருநூறு பேர் முதல்வருக்கு வரவேற்பளிப்பர் என நேற்று நியுயோர்க் தகவல்கள் தெரிவித்தன

இதேவேளை முதல்வரது நிலை சீராகவும், திருப்தியாகவும் இருப்பதாக முதல்வரது குடும்ப டாக்டர் பி ஆர் சுப்பிரமணியன் நேற்று சென்னைக்கு அனுப்பிய செய்தியொன்றில் தெரிவித்துள்ளார்.

---

## லெபனான் வரவேற்பு

(பெய்றூட்)

தென் லெபனானிலிருந்து இஸ்ரேலியத்துருப்புகள் மூன்று கட்டங்களாக வாபஸ் பெறுவது என்ற திட்டத்தை லெபனான் அரசு வரவேற்றுள்ளது.

---

சாந்தி - (யாழ்நகர்)
12-1-85 முதல்
0 30, 2.15 மட்டும்
மல், சுலக்ஷனா, ராதா, தங்கவேலு நடித்த
A. V . இன்
தூங்காதே தம்பி தூங்காதே
(ஈஸ்மன் கலர்)

ஈழமுரசு

மலிவான விமான டிக்கட்
சகல வெளிநாட்டு பிரயாண ஒழுங்குகள்

உடன் தொடர்பு கொள்க
திரு. மகேந்திரராசா

TET
ரான்ஸ் யூரே ரவல்ஸ்

இல; 6, நவீன சந்தை, மேல்மாடி யாழ்ப்பாணம். தொலைபேசி : 23831

## உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணி:

### தமிழக மீனவர் பிரச்சினையில்

# அரச அதிகாரிகளாலேயே அரசுக்கு நெருக்கடி நிலை ஏற்பட்டது!

(கொழும்பு)

இலங்கையும் இந்தியாவும் கச்சதீவு சம்பந்தமாக செய்து கொண்ட ஒப்பந்தத்தின் ஆரு வது ஷரத்தின் கீழ் இரு நாட்டுவள்ளங்களும், மற்ற நாட்டுக்கடலில் இதற்கு முன்னர் அனுபவித்து வந்த உரிமைகளைத் தொடர்ந்தும் அனுபவிக்க இடமளிக்கப் பட்டிருக்கிறது என்று கொழும்பு உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம் நேற்றுத் தெரிவித்தார்.

பதினேழு தமிழக மீனவர்களுக்கும் எதிரான குற்றச் சாட்டுக்கள் நேற்று அட்டாணி ஜெனரலால் வாபஸ் பெறப் பட்டதையடுத்து, உயர் நீதிமன்ற நீதியரசர் திரு. ரி. இராமநாதன் முன்னிலையில் இந்தியத் தூதரகத்தின சார்பில் ஆஜரான சட்டத்தரணி பாலசுப்பிரமணியம் நடந்து முடிந்து விவகாரங்கள் பற்றி எடுத்து விளக்கினார்.

நெடுந்தீவுக்கருகில் கைதானதாகக் கூறப்படும் தமிழகமீனவர்கள் யாழ்ப்பாணம் உயர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படாமல், அனுராதபுரத்தில் ஆஜர் செய்யப்பட்டதும், பின்னர் இந்தியத் தூதரகத்திற்கோ, தமக்கோ அறிவிக்கப்படாமல் இவ்வழக்கு கொழும்புக்கு மாறபபட்டது குறிப்பிடத்தக்கது என்றும் தெரிவித்த சட்டத்தரணி யாழ்ப்பாண மாவட்ட நிர்வாகத்திலுள்ள நெடுந்தீவுக்குள், மன்னார் கடற்பெருழில் விரிவாக்க உத்தியோகஸ்தர் எவ்வாறு சென்றார் என்று தெரிந்து கொள்ள வேண்டும் என்றும் நீதியரசரிடம் கேட்டுக் கொண்டார்.

சில அரச உத்தியோகத்தர்கள் இவ்விடயத்தில் தாமாக நடந்து கொண்ட விதத்தினாலேயே அரசுக்கு நெருக்கடி ஏற்பட்டதாகவும், இனிமேல் இவர்கள் இவ்வாறு நடந்து கொள்ளாதிருக்க அட்டர்ணி ஜெனரல் அறிவுறுத்த வேண்டுமெனவும் சட்டத்தரணி பாலசுப்பிரமணியம் கேட்டுக் கொண்டார்.

## இரு சிங்களப் பாடசாலைகள் மன்னாரில் மூடப்பட்டுள்ளன

(மன்னார்)

மன்னார் மாவட்டத்திலுள்ள இரண்டு சிங்களப் பாடசாலைகள் தற்போது மூடப்பட்டுள்ளன.

மடு ரூட் சிங்கள மகாவித்தியாலயம் அப்பகுதி சிங்கள மக்கள் இடம்பெயர்ந்து சென்றதால் மூடப்பட்டுள்ளது. மன்னார் சிங்கள மகாவித்தியாலயம் பாதுகாப்புக் காரணமாக மூடப் பட்டுள்ளது.

கொண்டச்சி, தலைமன்னார் ஆகிய இடங்களிலுள்ள சிங்களப் பாடசாலைகள் தொடர்ந்தும் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

## மன்னார் லொறி கடத்தப்பட்டது

(மன்னார்)

மன்னாரிலிருந்து கருவாடு ஏற்றிக்கொண்டு முருங்கன் பாதைவழியாக சென்ற லொறியொன்று நேற்று முன்தினம் இனம் தெரியாத இளைஞர்களால் துப்பாக்கி முனையில் அபகரித்துச் செல்லப்பட்டதாக புகார் செய்ப்பட்டுள்ளது

## முத்திரை, பணம் கொள்ளை

நேற்று முன்தினம் அளவெட்டி தபால் நிலையத்தில் முத்திரைகளும், பணமும் துப்பாக்கியுடன் வந்த சிலரால் கொள்ளையடிக்கப்பட்டதாக யாழ் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது, இதன் பெறுமதி இரண்டாயிரத்து ஒன்பது ரூபா எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

## 17 தமிழக மீனவ...

—1-ம் பக்கத் தொடர்

ஏதுவாக தலைமன்னாரில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தமிழக மீனவரின் படகுகள் கடற்படை ஊழியர்களால் நேற்று திருத்தம் செய்யப்பட்டதாக எமது மன்னார் நிருபர் அறிவித்துள்ளார்.

டில்லியிலுள்ள இலங்கைத் தூதுவர், கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் ஆகியோருடன்தான் தொடர்ந்தும் தொடர்பு கொண்டிருந்ததாகவும், இருநாடுகளுக்குமிடையே நல்லெண்ணம் புரிந்து கொள்ளும் மனப்பான்மை, ஒத்துழைப்பு ஆகியவற்றாலேயே இப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு ஏற்பட்டது என்றும் அமைச்சர் ஹமீத் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நேற்று அமெரிக்கா பயணமாவதற்கு முன்னர், பாதுகாப்பு உயர் அதிகாரிகள், தளபதிகளுடன் அமைச்சர் சில மணி நேரம் தனிமையில் பேச்சுக்களை நடத்தினார்.

## இன்று கூட்டம்

(மல்லாகம்)

உடுவில் மகளிர் கல்லூரி மண்டபத்தில் இன்று சனிக்கிழமை உடுவில் வை. எம். சி. ஏ ஸ்தாபனத்தின பொதுக் கூட்டம திரு. எஸ். எஸ் சி. கனகசிங்கம் தலைமையில் நடைபெறும, கிறிஸ்தவ தொடர்பு இயககுநர் அருட்திரு ஆர். துரைராசா அடிகளார் திரு. சுரேஷ் கனகராசா, திரு எஸ் பி. சீவானந்தம் ஆகியோர் சிறபபுரை நிகழ்த்துவார்கள்.

## பீலிக்ஸ் லண்டன்,..

1ம் பக்கத் தொடர்

மாக சிகிச்சை பெறுவதற்கு லண்டன் பயணமானார். அதற்கு முன்னர் ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தனவும், பல அமைச்சர்களும் அவரை ஆஸ்பத்திரியில சென்று பார்வையிட்டனர்.

## ராணுவ சூட்டுக்கு...

—1-ம பக்கத் தொடர்

ளென்றும், இவர்கள் பருத்தித்துறையைச் சேர்நத "விஜி" திருமலையைச் சோநத "காளி"யாகவிருக்கலாமெனவும், முறிகண்டிய ழ்தவி கண்ணிவெடி தாக்குதலில் இவர்களும பங்குபற்றியிருக்கலாமெனவும் ராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## சாரணியர்களின் சீருடை வெள்ளை நிறமாக மாறுகிறது

(அச்சுவேலி)

சாரணியர்களின் சீருடை நிறம் மாற்றி அமைக்கப்படவுள்ளது. சாரணிய இயக்கத்தினரின் சீருடை பாதுகாப்பு படையினரின் சீருடை நிறத்தை ஒததாக இருப்பதால் சாரணியர்களின் சீருடையை "வெள்ளை" நிறத்திற்கு மாற்றி அமைக்குமாறு சாரணிய இயக்கத்தின் தலைமைப் பீடம் பிராந்திய நிர்வாகிகளிற்கு சுற்று நிருபம் மூலம் அறிவுரை வழங்கியுள்ளது.

தற்போதைய நிலையில் பாதுகாப்பு படையினரின் சீருடை நிறத்தில் சாரணிய தொண்டர்களின் சீருடை அமைந்திருப்பது பாதுகாப்பு படையினரின் கடமைக்கு பாதகமாக இருப்பதால்; சாரணியர் "சீருடை நிறம்" மாற்றி அமைக்கப்படவுள்ளதாக அறியப்படுகின்றது.

வெள்ளை நிறத்தில் சீருடையும் சாரணிய இலச்சினைகள், பதக்கம். பட்டிகள் முதலியனவற்றை அணிந்து சாரணியர் அணியை நடமாடுவதற்கு ஏற்பாடு செய்யும்படி பாடசாலைகள்: மற்றும் சாரணிய இயக்க தொண்டர் அணி செயற்படும் அமைப்புகளிற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

## கட்சிவிட்டுக்கட்சிமாற..

1-ம் பக்கத் தொடர்

னர் தாமாக கட்சியை விட்டு விலகினாலோ அல்லது கட்சியால் விலக்கப்பட்டாலோ அன்றேல் கட்சிக் கட்டளைக்கு விரோதமாக நடந்து கொண்டாலோ அவர் உறுப்பினராக இருக்கும் தகுதியை இழப்பாரெனக் கூறப்படடுள்ளது.

## குண்டுச்சத்தம் ..

1-ம் பக்கத் தொடர்

யது, கண்ணிவெடிச் சத்தம் போல இக் குண்டுவெடிப்பினால் நிலமும், கட்டடங்களும் அதிர்நததாக அதற்கு அண்மையில் வாழ்பவர்கள் தெரிவித்தனர். ஆனாலும் மேலதிக விபரமெதனையும எவரும் தெரிவிக்கவில்லை.

## காங்கேசன்...

—1ம்- பக்கத் தொடர்

மொன்றின்போது சுமார் பதினெட்டாயிரம் ரூபா பெறுமதியான முததிரைகள் துப்பாக்கி முனையில் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளதாக புகார் செய்யப்பட்டுள்ளது.

## விக்கிரமபிரிட்டன்...

1-ம் பக்கத் தொடர்

இவர் அங்கு தங்கியிருக்கும் போது. அமைச்சர் அத்துலத்முதலியை பிரிட்டனில் சந்திப்பார் எனக் கூறப்படுகின்றது.

## சிறில் மத்தியுவின்...

—1-ம் பக்கத் தொடர்

தடை விதிக்க இவர் தாக்கல் செய்த மனு மீது கொழும்பு மாவட்ட நீதிபதி எம். எச். பி. மொறுயஸ் நேற்று இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்தார்.

இதன் பிரகாரம் இன்று மேற்படி சங்கத்தின் கூட்டம் நடைபெறுது. மனுமீதான விசாரணையையும்நீதிபதி பெப்வரி 22ம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

## வழக்குகள்...

—1-ம் பக்கத் தொடர்

லாமை இவைகளில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

பல வழக்குகளின் எதிரிகள் நீர்கொழும்பு சிறையில் இருப்பது, எதிரிகளுக்கு வாரண்ட் வழங்க முடியாதிருப்பது, வங்கிகள், தபாலகங்கள் மூடப்பட்டிருப்பது ஆகியவைகளாலும் வழக்கு விசாரணைகளை நடத்த முடியாத நிலைஉருவாகியிருப்பதாக சங்கத்தலைவர் எஸ் ஆர். கனகநாயகமும், செயலாளர் இராஜராஜேஸ்வரன் தங்கராஜாவும் மகஜரில் தெரிவித்துள்ளனர்

## லலித் நேற்று...

1-ம் பக்கத் தொடர்

துப் படைகளுக்கு மேலும் பல உதவிகளை அமெரிக்காவிடமிருந்து பெறுவதே அமைச்சரின் அமெரிக்க விஜயத்தின் முக்கிய நோக்கமெனக் கூறப்படுகின்றது

## மரண அறிவித்தல்

### வயித்திலிங்கம் பொன்னம்பலம்

நெடுந்தீவு மேற்கைச் சேர்ந்த வயித்திலிங்கம் பொன்னம்பலம் காலமானார்.

இவர் நல்லம்மாவின் அன்புக்கணவரும், புவனேஸ்வரராசா, தேவாம்பிகை அமிர்தராசா ஆகியோரின் அன்புத் தந்தையும் சரஸ்வதியின் அன்பு மாமனாரும் துஷியந்தன், துஷீதா ஆகியோரின் அன்பு பேரனுமாவார் அன்னாரின ஈமக்கிரியைகள் (26-1-85) சனிக்கிழமை நெடுந்தீவு மேற்கில் நடைபெறும் இதை உற்றார் உறவினாகள் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: புவனேஸ்வரராசா (P.P.)

இலங்கைப் பல்கலைக் கழக வெளிவாரி பட்டப்படிப்புகள்

கல்வியாண்டு 1985/86

பாடநெறிகள் :-
G A. Q. .... .... .... B A.
FIRST IN COMM ........B. COMM.
FIRST IN LAWS ..........LL. B.

தகுதிகள்:
* க பொ. த உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் மேற்குறிப்பிட்ட பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.
* விண்ணப்பப் படிவங்களையும் விபரத்திரட்டினையும் பெற விரும்புவோர் REGISTRAR, ASTAN INSTITUTE, JAFFNA. என்ற பெயருக்கு ரூபா 10/- 'காசுக்கட்டளையுடன்' சுயமுகவரியிட்ட முத்திரை ஒட்டப்பட்ட 9"×4" அளவுடைய தபால் உறையை அனுப்பிவைத்தல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்தில் நேரிலும் பெற்றுக்கொள்ளலாம்.

லண்டன்பரீட்சைக்குரியவகுப்புகளும் ஆரம்பமாகின்றன
IAA. PART I
IAS FOUNDATION & INTER
சகல பாடநெறிகளுக்கான விரிவுரைகள்
ஆரம்பம் 2-2-85

விபரங்களுக்கு:-
ASTAN INSTITUTE
166/1 HOSPITAL ROAD. — JAFFNA.

"ஈழமுரசு" சாயப்பா அடவாடைசிங் அ்.. ஸ்தாபனத்தாரால், 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 25 1-85 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.